சார்பு நீதிமன்றம், சங்ககிரி

முன்னிலை: திரு.ந.பன்னீர்செல்வம், B.A., B.L.,

சார்பு நீதிபதி, சங்ககிரி

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், கார்த்திகைத்திங்கள் 12 ம் நாள் செவ்வாய்க்கிழமை

2023-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை

அ.வ.எண். 232/2020

(CNR.No. TNSA070006822020)

காளியப்பன் ... வாதி

/எதிராக/

அம்மாசி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 20.11.2023 அன்று இந்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ஸ்ரீதர் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதியை அழைத்தும் முன்னிலையாகாததால் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், வாதி தரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்காவணங்களையும், சாட்சியத்தையும் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

இவ்வழக்கானது வாதிக்கு பிரதிவாதி செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.4,58,591/- ஐ ரூ.18% வட்டியுடனும், பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் கடனை செலுத்த உத்தரவிடும்படி பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்:

பிரதிவாதி, வாதியிடம் கடந்த 10.01.2018 ம் தேதி அன்று அவரது குடும்ப அவசர மற்றும் வியாபார செலவுக்காக மாதம் ஒன்றுக்கு ஒரு நூற்றுக்கு ரூ.1.50 வட்டியுடன் செலுத்துவதாக கூறி ரூ.3,00,000/- கடனாக பெற்றார். மேற்படி கடன் தொகைக்கு ஆதாரமாக அன்றே தாவா கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தார். வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடன் தொகையை வட்டியுடன் செலுத்துமாறு கேட்டபோது பிரதிவாதி கடன் தொகையை செலுத்தவில்லை. அதனால் வாதி கடந்த 03.10.2019 ம் தேதி அன்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். மேற்படி அறிவிப்பை 11.10.2019 ம் தேதியில் பெற்றுக்கொள்ளாமல் பிரதிவாதி வேண்டுமென்றே தவிர்த்துவிட்டார். மேலும் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதிலறிவிப்பும் அனுப்பவில்லை. பிரதிவாதி வாதியிடம் பெற்ற கடன் தொகையையும் செலுத்தவில்லை. மேற்படி

பிரதிவாதி, வாதியிடம் பெற்ற கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பதால், பிரதிவாதி பெற்ற கடன் தொகையை வசூல் செய்ய வேண்டி, வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர் இவ்வழக்கினைப் பொறுத்தவரையில் தோன்றாத்தரப்பினராக உத்தரவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

3. <u>பிரச்சனை:</u>

இவ்வழக்கில் வாதி கோரியபடி தீர்ப்பளிக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பதுதான் இதில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

4. <u>தீர்வு:</u>

இத்தாவாவில் வாதியின் தரப்பில், வாதி காளியப்பன், அய்யனார், சின்னக்கண்ணன் ஆகியோர் வா.சா.1 முதல் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. நீதிமன்ற சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

5. இத்தாவாவில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை மெய்பிக்கும் பொருட்டு வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட வாதி காளியப்பன் என்பவர் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வழக்குரை சங்கதிகளை ஒட்டி சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வாதி தரப்பில் வா.சா.2 மற்றும் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட அய்யனார் மற்றும் சின்னக்கண்ணன் ஆகியோர் வா.சா.1 ன் சாட்சியத்தை உறுதியூட்டம் செய்யும் விதமாக சாட்சியம் அளித்துள்ளனர். மேலும் 10.01.2018 ம் தேதியிட்ட தாவா கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 03.10.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 11.10.2019 ம் தேதியில் திருப்பி அனுப்பிய அஞ்சலக உறை அசல் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, வாதி தரப்பு வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களை மறுத்துரைக்கும் விதமாக குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதி முன்வராமல் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார். அதனால் வாதியிடம் பிரதிவாதி பெற்ற கடன் தொகை ரூ.3,00,000/-ஐ திருப்பி செலுத்தாமல் இருந்து வருவது உண்மை தான் என தெரியவருகிறது. ஆகவே, வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்படி சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் அடிப்படையில் வாதி தன்மீதுள்ள மெய்பிக்கும் சுமையை தீர்த்துள்ளதால், அவர் இத்தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதுதான் என இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

6. முடிவு:

இறுதியாக, இத்தாவா அனுமதிக்கப்பட்டு வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையான ரூ.4,58,591/-ஐ அசல் தொகையான ரூ.3,00,000/-க்கு தாவா தாக்கலான தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டுக்கு 9% ஆண்டு வட்டியும், பின்னர் தீர்ப்பாணை தேதியிலிருந்து முழுதொகையையும் செலுத்தி முடிக்கப்படும் தேதி வரையில் மேற்படி அசல் தொகைக்கு ஆண்டுக்கு 6% பின் வட்டியையும் சேர்த்து தாவா செலவுத் தொகையுடன் 2 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்புரை என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

N PANNEERSELVAM
Digitally signed by N PANNEERSELVAM
Date: 2023.11.28 16:47:57 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.

1. வாதி தரப்பு சாட்சி:-

வா.சா.1 – காளியப்பன் (வாதி)

வா.சா.2 - அய்யனார்

வா.சா.3 - காளியப்பன்

2. வாதி தரப்பு சான்றாவணங்கள்:

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 10.01.2018 | தாவா கடனுறுதி சீட்டு | /அசல்/ |
| வா.சா.ஆ.2 | 03.10.2019 | வழக்கறிஞர் அறிவிப்பு | /அலுவலக நகல்/ |
| வா.சா.ஆ.3 | 11.10.2019 | திருப்பி அனுப்பிய அஞ்சலக உறை | /அசல்/ |

3. பிரதிவாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்: இல்லை.

N PANNEERSELVAM
Digitally signed by N PANNEERSELVAM
Date: 2023.11.28 16:48:13 +0530

சார்பு நீதிபதி,
சங்ககிரி.